**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.147/2016** **Date:26.06.2025**
**(D.W–1 )**

திரு. சண்முகசுந்தரம் த/பெ நாகப்பன்

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1.1) இவ்வழக்கில் 1 ம் பிரதிவாதி எனது தாயார் ஆவார். தாவா சொத்துக்கள் எந்த காலையில் அமைந்துள்ளது என்றால் க.ச.59/2H யில் அமைந்துள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 30 செண்ட் ஆகும். க.ச.59 காலையில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. க.ச.59 காலையில் யார் யார் பாகஸ்தர்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. க.ச.59 பூமி 1986 ல் உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, எனது தகப்பனார் கூறியுள்ளார். மேற்படி பூமி யார் யார் பெயருக்கு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் எனது பக்கத்து காட்டுகாரர் பொன்னுசாமி, சரசம்மாள், பழனியம்மாள் ஆகியோர்கள் பெயர்களில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படியாளர்களுக்கு எவ்வளவு விஸ்தீரணம் செய்யப்பட்டுள்ளது விவரம் தெரியுமா என்றால் தெரியாது.
1.2) க.ச.59/2H சொத்து எவ்வகையில் எனக்கு பாத்தியம் என்றால் 7 செண்ட் நிலம் எனது தகப்பனாரால் கிரையம் பெற்றப்பட்ட சொத்து மீதி விஸ்தீரணம் எனக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது. எனது தகப்பனார் மேற்படி சொத்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது அப்போது நான் சிறுவயதில் இருந்தேன். எனது தகப்பனார் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் எந்த காலை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை ஆனால் மேற்படி கிரைய பத்திரத்தில் உள்ள செக்குபந்தியும் க.ச.59/2H காலைக்கான செக்குபந்தியும் சரியாக

குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தில் சர்வே எண் சரியாக உள்ளதா என்றால் தவறாகத்தான் உள்ளது செக்குபந்தி சரியாக உள்ளது.

1.3) மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணை சரியாக திருத்தம் செய்ய இதுவரை நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதற்காகத்தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள செக்குபந்தி சரியானது என காட்ட என்னிடம் ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் எனது தகப்பனார் பெயரில் நத்தம் பட்டா உள்ளது மேலும் பூர்வீக படி எனது தகப்பனாரின் தாத்தாவான ராயப்பகவுண்டர் பெயரில் உள்ள 1939 ம் ஆண்டு மூலப்பத்திரம் உள்ளது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க குறுக்க விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

KANMANI T

Digitally signed by KANMANI T
Date: 2025.06.26 18:01:45 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.